STC.No.120/2026 PW1.திரு.ராஜாங்கம்

தேதி– 18.08.2026

எதிரி ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355–ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எதற்காக வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் எதிரி கைமாற்றாக பணம் வாங்கியதற்காக வழக்கு தாக்கல் செய்தேன். எதிரி எவ்வளவு ரூபாய் தர வேண்டும் என்றால்நான்கு லட்சம் கொடுக்க வேண்டும். நான் எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்றால் 03.11.2024 ல் கொடுத்தேன். எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்றால் சின்னமனூரில் உள்ள எனது வீட்டில் வைத்து பணம் கொடுத்தேன்.எதிரி எனக்கு எத்தனை வருடமாக பழக்கம் என்றால் சுமார் பத்து வருடமாக பழக்கம். எங்கு வைத்து பழக்கம் என்றால் ஊட்டியில் வைத்து பழக்கம். நான் எதற்காக ஊட்டிக்கு சென்றேன் என்றால் ரியல் எஸ்டேட் முகவராக உள்ளேன், அதற்காக அங்கு செல்வேன். நான் ஊட்டியில் இடம் வாங்கி விற்பனை செய்ய முகவராக இருந்துள்ளேன். சுமார் 6, 7 இடங்கள் விற்பனை செய்வதற்கு முகவராக இருந்துள்ளேன். யார் யாருக்கு இடம் வாங்கி கொடுத்துள்ளேன் என்றால் சிவா,பன்னீர்செல்வம் ஆகியோருக்கு வாங்கி கொடுத்து உள்ளேன். மேற்படி சிவா என்பவர் ஃபயர் சர்வீஸில் இருந்தார்.எத்தனை வருடத்திற்கு முன்பு இடம் வாங்கி கொடுத்துள்ளேன் என்றால் ஆறு, ஏழு வருடத்திற்கு முன்பு வாங்கி கொடுத்துள்ளேன்.

2. எதிரி எனக்கு முதலில் எவ்வாறு பழக்கம் என்றால் பொட்டானிக்கல் கார்டனுக்கு நான் செல்லும் பொழுது அவரும் வந்திருந்தார், அப்போது பழக்கம் ஆனது.எதிரியின் குடும்ப உறுப்பினருக்கும், எனக்கும் சம்பந்தமில்லை என்றால் சரிதான். எதிரி எந்த தேதியில் பணம் கேட்டார் என்றால் 03.11.2024 ஆம் தேதிக்கு பத்து நாட்கள் முன்பு பணம் கேட்டார். எதிரி பணம் கேட்ட பின்பு எனது வீட்டிற்கு வர வைத்து நான் பணம் கொடுத்ததாக கூறுகிறேன் என்றால் சரிதான். எதிரி என்ன வேலை செய்கிறார் என்றால் தூய இருதய ஆண்டவர் மேல்நிலைப்

பள்ளியில் உடற்பயிற்சி ஆசிரியராக உள்ளார். மேற்படி பள்ளி ஆனது அரசு உதவி பெறும் பள்ளி என்றால் சரிதான். எனக்கு வருடத்திற்கு எவ்வளவு வருமானம் வரும் என்றால் சுமார் 5 லட்சம், 6 லட்சம் வருமானம் வரும். மேற்படி வருமானத்தை வைத்துதான் எனது வீட்டு செலவு, பிள்ளைகளின் படிப்பு செலவுகளை பார்க்க வேண்டும் என்றால் இல்லை. எனது மனைவி அரசு ஆசிரியராக இருப்பதால் அவரது வருமானத்தை வைத்து வீட்டு செலவை பார்ப்போம். நான்கு லட்சம் வங்கியில் இருந்து எடுத்து கொடுத்தேனா என்றால் இல்லை, சிறுக சிறுக சேமித்து வீட்டில் வைத்திருந்தேன். இது மாதிரி எத்தனை நபர்களுக்கு நான் பணம் கொடுத்துள்ளேன் என்றால் ஐந்து நபர்களுக்கு பணம் கொடுத்து உள்ளேன். கோத்தகிரியை சேர்ந்த ஆண்ட்ருஸ், ஊட்டியில் உள்ள நபருக்கு கொடுத்தேன், அவரது பெயர் ஞாபகமில்லை. மேற்படி ஐந்து நபர்களுக்கு சேர்த்து எவ்வளவு பணம் கொடுத்துள்ளேன் என்றால் சுமார் 15 லட்சம் கொடுத்துள்ளேன். மேற்படி நபர்களுக்கு எப்போது பணம் கொடுத்தேன் என்றால் 2021, 2022, 2023 ல் கொடுத்தேன்.

3. மேற்படி ஐந்து நபர்களில் எத்தனை நபர்கள் மீது நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான்கு நபர்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன், அவர்களின் பெயர் என்னவென்றால் ஞாபகம் இல்லை. மேற்படி நான்கு நபர்களும் ஊட்டியை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். ஊட்டியை சேர்ந்த சிவாஜி என்பவர் மீது தேனி விரைவு நீதிமன்றத்தில் STC 66/2024 என்ற வழக்கு நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு எவ்வளவு ரூபாய்க்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஐந்து லட்சத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எந்த வங்கியின் காசோலையை எதிரி கொடுத்தார் என்றால் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா ஊட்டி கிளையின் காசோலை கொடுத்தார். காசோலையின் எண் தெரியுமா என்றால் 502650 ஆகும். காசோலையின் நிறம் என்னவென்றால் மஞ்சள் நிறமாகும். காசோலை என்ன நிறத்தில் பூர்த்தி செய்யப்பட்டது என்றால் நீல நிறத்தில் பூர்த்தி செய்யப்பட்டது. காசோலையில் எதிரி ஆங்கிலத்தில் கையொப்பம் செய்தாரா, தமிழில் கையொப்பம் செய்தாரா என்றால் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்தார். ஊட்டியில் பாலாஜி பைனான்ஸ் நிறுவனம் என்று பெயர் பாலசுப்பிரமணியன் என்பவர் உடன் நான் கூட்டாளியாக இருந்து நடத்தி வருகிறேன் என்றால் இல்லை.

4. எனது செல் நம்பர் என்ன என்றால் 9942611811 ஆகும். மேற்படி செல் நம்பரை 10, 15 வருடமாக பயன்படுத்துகிறேன். வேறு செல் நம்பர் பயன்படுத்துகிறேனா என்றால் இல்லை. 2017ல் பாலசுப்பிரமணியனிடம் எதிரி 175000/– ஆயிரம் கடன் வாங்கினார் என்றும், அதற்கு ஆதரவாக காசோலை கொடுத்தார் என்றும், 25 தவணைகளில் 10 தவணைகள் திருப்பி செலுத்தி விட்டார் என்றும், மீதி பதினைந்து தவணைகள் திருப்பி செலுத்தாத நிலையில் காசோலையை வைத்து என் மூலம் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த காசோலை இல்லாமல் 4 காசோலைகள் பாலசுப்ரமணியனிடம் எதிரி கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. பாலசுப்பிரமணியனை தெரியாது. எதிரிக்கும், எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எதிரி என்னிடம் எந்த தொகையும் வாங்கவில்லை என்றும், எதிரி என்னிடம் காசோலை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எத்தனை வங்கியில் கணக்கு உள்ளது என்றால் தேனியில் எச்டிஎப்சி வங்கி, சின்னமனூர் SBI வங்கியில் கணக்கு உள்ளது.

5. எதிரிக்கு நான்கு லட்சம் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதி வாய்ப்பு இல்லை என்றும், எனது வங்கி பரிவர்த்தனையை பார்த்தால் மேற்படி விபரங்கள் தெரியவரும் என்பதால் எனது வங்கி பரிவர்த்தனையை தாக்கல் செய்ய தயாரா என்றால் தயாரா. எதிரி, முரளி, சிவாஜி, மெர்சி, சின்னசாமி ஆகியோர்கள் பாலசுப்ரமணியனிடம் கடன் வாங்கினார்கள் என்றும், அவர்கள் கொடுத்த காசோலையை வைத்து பாலசுப்பிரமணியம் என் மூலம் எதிரி மீதும், சிவாஜி மீதும் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நானும், பாலசுப்பிரமணியனும் ஊட்டியில் வாடகைக்கு வீடு எடுத்து அரசு ஊழியர்களுக்கு மட்டும் வட்டிக்கு கடன் கொடுத்து வருகிறோம் என்றால் சரியல்ல. எதிரியும், மற்ற நபர்களும் வாங்கிய கடனை திருப்பிக் கொடுத்து விட்டார்கள் என்றும், அவர்கள் கொடுத்த காசோலையை வைத்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் எதிரியும், மற்ற நபர்களும் பாலசுப்பிரமணியன் மீது நீலகிரி மாவட்டம் காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கும் எதிர்க்கும் சம்பந்தமில்லை என்றும், சம்பந்தமில்லாத எதிரியின் மீது நான் வழக்க தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பாலசுப்பிரமணியம் என்பவர் எதிரி மீதும், மற்ற நபர்கள் மீதும் புரோநோட்

கடன் கொடுக்க வேண்டும் என்று கூறி மூன்று மாதத்திற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் தெரியாது. காசோலையானது எவ்வித மறுபயனும் இல்லாததால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.18 23:10:13 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam